# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - தொழிற்புரட்சி முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

40 x 1 = 40

1) நீராவி படகுப் போக்குவரத்துச் சேவையை நிறுவியவர் யார்?

(அ) ஆர்க்ரைட் (ஆ) சாமுவேல் கிராம்ப்டன் **(இ) ராபர்ட் ஃபுல்டன்** (ஈ) ஜேம்ஸ் வாட்

2) மான்செஸ்டர் நகரம் ஏன் ஜவுளி உற்பத்திக்கு உகந்த இடமாகப் கருதப்பட்டது?

(அ) நிலம் கிடைக்கப் பெற்றமை (ஆ) மிகுந்த மனித வளம் (இ) நல்ல வாழ்க்கைச் சூழல்

**(ஈ) குளிர்ச்சியான தட்பவெப்ப நிலை**

3) தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

**(அ) எலியாஸ் ஹோவே** (ஆ) எலி- விட்னி (இ) சாமுவேல் கிராம்டன் (ஈ) ஹம்ப்ரி டேவி

4) நீராவி இயந்திரத்தை பிரான்சில் அறிமுகம் செய்த குடும்பம் எது?

**(அ) டி வெண்டெல்** (ஆ) டி ஹிண்டல் (இ) டி ஆர்மன் (ஈ) டி ரினால்ட்

5) சிலேட்டரை அமெரிக்க தொழில் புரட்சியின் தந்தை என அழைத்தவர் யார்?

(அ) எப்.டி. ரூஸ்வெல்ட் **(ஆ) ஆண்ட்ரூ ஜேக்சன்** (இ) வின்ஸ்டன் சர்ச்சில் (ஈ) உட்ரோ வில்சன்

6) கீழ்க் காண்பனவற்றில் எது ஹே மார்க்கெட் நிகழ்ச்சியின் நினைவு நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது?

(அ) சுதந்திர தினம் (ஆ) உழவர் தினம் **(இ) உழைப்பாளர் தினம்** (ஈ) தியாகிகள் தினம்

7) எங்கு ஜோஸ் வெரெய்ன் சுங்க ஒன்றியம் உருவாக்கப்பட்டது?

(அ) இங்கிலாந்து **(ஆ) ஜெர்மனி** (இ) பிரான்ஸ் (ஈ) அமெரிக்கா

8) பிரான்சில் முதல் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்தவர் யார்?

(அ) லூயி ரெனால்ட் **(ஆ) அர்மான் பியூ காட்** (இ) தாமஸ் ஆல்வா எடிசன் (ஈ) மெக் ஆடம்

9) எக்கண்டுபிடிப்பு பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தது

(அ) உருட்டாலைகள் **(ஆ) பஞ்சுக் கடைசல் இயந்திரம்** (இ) ஸ்பின்னிங் மியூல் (ஈ) இயந்திர நூற்புக் கருவி

10) கீழ்க்காண்பனவற்றில் எது இரும்பை உருக்குவதற்காக முற்காலத்தில் பயன்படுத்தபட்டது?

(அ) கற்கரி **(ஆ) கரி** (இ) விறகு (ஈ) காகிதம்

11) முதன் முதலில் தொழிற்புரட்சி தோன்றிய இடம்

(அ) அமெரிக்கா (ஆ) ஜெர்மனி **(இ) இங்கிலாந்து** (ஈ) இந்தியா

12) இங்கிலாந்தின் சுரங்க முதலாளிகளுக்கு பெரும் இடையூறாக இருந்தது.

**(அ) நீர்க்கசிவு** (ஆ) நிலச்சரிவு (இ) மழை (ஈ) காற்று

13) நூற்பின் வேகத்தை அதிகரித்தது

(அ) காட்டன் ஜின் (ஆ) டார்பி முறை (இ) ஊது உலை **(ஈ) பறக்கும் நாடா**

14) தொழிற்சாலையின் இதயமாகத் திகழ்ந்தது

(அ) வேளாண்மை **(ஆ) ஜவுளி உற்பத்தி** (இ) மின் உற்பத்தி (ஈ) வாகன உற்பத்தி

15) ஜான் லவுடன் மெக்ஆடம் என்பவர் _____ நாட்டைச் சேர்ந்த முன்னோடிப் பொறியாளர் ஆவார்.

(அ) இங்கிலாந்து **(ஆ) ஸ்காட்லாந்து** (இ) அயர்லாந்து (ஈ) பின்லாந்து

16) இயற்கைச் சூழலுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

(அ) பிரெஞ்சுப் புரட்சி **(ஆ) தொழிற்புரட்சி** (இ) அமெரிக்கப் புரட்சி (ஈ) பசுமைப்புரட்சி

17) தொழிற்புரட்சியின் வருகையைத் தொடர்ந்து உலகின் தொழிற்பட்டறையாக மாறிய நாடு

**(அ) இங்கிலாந்து** (ஆ) ஜப்பான் (இ) ரஷ்யா (ஈ) சீனா

18) உலகின் ஜவுளி உற்பத்தித் தொழிலின் தலைநகர்

(அ) லண்டன் (ஆ) லங்காஷையர் (இ) யார்க்ஷையர் **(ஈ) மான்செஸ்டர்**

19) முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டல் கொள்கையிலிருந்து உழைக்கும் வர்க்கத்தைப் பாதுகாப்பதற்காக, அறிவியல்பூர்வ பொதுவுடைமை எனும் கோட்பாட்டை முன்வைத்தவர்.

(அ) லெனின் (ஆ) மார்ஷல் **(இ) கார்ல் மார்க்ஸ்** (ஈ) மாண்டெஸ்கியூ

20) இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் "சீர்திருத்த மசோதா" கொண்டு வரப்பட்ட ஆண்டு

**(அ) 1832** (ஆ) 1857 (இ) 1852 (ஈ) 1875

21) அல்சாஸ் மாகாணத்தின்_____ நகரம் இயந்திரம் செய்வதற்கான அச்சுகளால் புகழ்பெற்றது.

(அ) பெர்லின் **(ஆ) முல்ஹவுஸ்** (இ) லொரைன் (ஈ) செயின்ட் இடியன்

22) தொழிற்புரட்சி உருவாவதற்குத் தேவையான இயற்கை வளங்கள்_____ நாட்டில் இயல்பாகவே அமைந்திருந்தது.

(அ) பிரான்ஸ் (ஆ) இங்கிலாந்து (இ) அமெரிக்கா **(ஈ) ஜெர்மனி**

23) ஜெர்மனியின் அரசுகள் ஒன்றாக இணைந்த ஆண்டு

(அ) 1817 (ஆ) 1807 **(இ) 1871** (ஈ) 1781

24) உலகப்புகழ் பெற்ற ஜெர்மனியின் கார்

**(அ) பென்ஸ்** (ஆ) அம்பாவிடர் (இ) ஹோண்டா (ஈ) பியட்

25) "அமெரிக்க தொழிற்புரட்சியின் தந்தை" என்று புகழப்பட்டவர்

(அ) ஆண்ட்ரு சாக்சன் (ஆ) மோசஸ் பிரௌன் (இ) சாமுவேல் கிராம்ப்டன் **(ஈ) சாமுவேல் சிலேட்டர்**

26) i) மான்செஸ்டர் நகரில் நிலவிய வெப்பமான காலநிலை ஜவுளி உற்பத்திக்கு உகந்ததாக இருந்தது.
ii) லிவர்பூல் துறைமுகம், லங்காஷையர் நிலக்கரிச் சுரங்கம் ஆகியவற்றுக்கு அருகில் மான்செஸ்டர் உள்ளது.
iii) 1771-ஆம் ஆண்டில் 1 லட்சத்து 80 ஆயிரம் மக்கள் மான்செஸ்டரில் வசித்தனர்.
iv) அடுத்த ஐம்பது ஆண்டுகளில் இதன் மக்கள் தொகை வெகுவாக குறைந்தது.

(அ) i) சரி **(ஆ) ii) சரி** (இ) i) மற்றும் ii) சரி (ஈ) iii) மற்றும் iv) சரி

27) கூற்று : 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் லுட்டைட்ஸ் என்ற இயக்கத்தினர் இயந்திரங்களை அடித்து நொறுக்கி தம் எதிர்ப்பை தெரிவித்தனர்.
காரணம்: தங்கள் வாழ்வாதாரம் இயந்திரங்களின் வருகையால் சீராகும் என்று அவர்கள் நம்பினர்.

**(அ) கூற்று சரி, காரணம் தவறு** (ஆ) கூற்று தவறு. காரணம் சரி (இ) கூற்று. காரணம் இரண்டுமே தவறு

(ஈ) கூற்று, காரணம் இரண்டுமே சரி

28) கூற்று : இங்கிலாந்தை பின்னுக்குத் தள்ளி, 19-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி மிகப் பெரிய தொழில்மய நாடாக உருவாகியது.
காரணம் : உலகம் முழுவதும் ஜெர்மனியின் டெய்ம்லர், பென்ஸ் ஆகிய வாகனங்கள் மிகப் புகழ் பெற்றிருந்தன.

(அ) கூற்று சரி. காரணம் தவறு (ஆ) கூற்று தவறு, காரணம் சரி

**(இ) கூற்று. காரணம் இரண்டுமே சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்**

(ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

29) பறக்கும் நாடா இதற்கு உதவியது _____

(அ) பருத்தியிலிருந்து பருத்திக் கொட்டையைப் பிரித்தெடுக்க

(ஆ) மனித ஆற்றலுக்கு பதிலாக நீரின் ஆற்றலை பயன்படுத்த **(இ) நூற்பின் வேகத்தை அதிகரிக்க**

(ஈ) பஞ்சு உற்பத்தியை அதிகப்படுத்த

30) ஹென்றி வெள்ளிமர் எரு தனரிக்க ஒரு விவரவான, சிக்கனமான முறையைக் கண்டுபிடித்த ஆண்டு _____

(அ) 1802 (ஆ) 1767 **(இ) 1856** (ஈ) 1900

31) ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜான் லவுடன் மெக் ஆடம் என்பவர் __________ வடிவமைப்பதில் வல்லவர்.

(அ) இருப்புப் பாதை **(ஆ) சாலை** (இ) இயந்திரங்கள் (ஈ) நீராவிப் படகு

32) 1918-இல் நான்கு சக்கர வாகனத்தை உருவாக்கிய தூயி ரெனால்ட் எந்த நாட்டவர்?

**(அ) பிரான்ஸ்** (ஆ) இங்கிலாந்து (இ) ஸ்பெயின் (ஈ) ஜெர்மனி

33) ஜெர்மானியில் தொழிற்புரட்சிக்கு ஹார்ஸ் மலைகளில் ___________ கிடைத்ததும் ஒரு காரணம்.

(அ) தங்கம் (ஆ) வெள்ளி (இ) தாமிரம் **(ஈ) இரும்பு**

34) 'ஜோல்வெரெய்ன் சுங்க ஒன்றியம்' என்ற அமைப்பானது _________ பகுதிகளை உள்ளடக்கியது.

**(அ) ஜெர்மானிய** (ஆ) பிரான்ஸ் (இ) ரஷ்ய (ஈ) இங்கிலாந்து

35) அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை" என புகழப்பட்ட சாமுவேல் சிலேட்டர் எந்த நாட்டில் பிறந்தவர்?

(அ) ஜெர்மனி **(ஆ) இங்கிலாந்து** (இ) அமெரிக்கா (ஈ) ஸ்வீடன்

36) இந்தியாவில் முதன் முதலில் தொழிலாளர் தினம் 1-இல் மே 1 அன்று _________ நகரில் கொண்டாடப்பட்டது.

(அ) டெல்லி (ஆ) பம்பாய் (இ) கல்கத்தா **(ஈ) சென்னை**

37) ராபர்ட் ஃபுல்டன் என்பவர் _______ நதியில் நீராவிப் படகுப் போக்குவரத்தைத் தொடங்கினார்

**(அ) ஹாட்சன்** (ஆ) தேம்ஸ் (இ) ரைன் (ஈ) கொலம்பியா

38) நீராவி மூலம் நூற்பது தொழிலாளியின் உற்பத்தித் திறனை எவ்வளவு அலகுகள் அளவுக்கு அதிகரிக்கிறது?

(அ) 1000 (ஆ) 1500 **(இ) 500** (ஈ) 1100

39) ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் இயந்திர நூற்புக் கருவியைக் கண்டுபிடித்த ஆண்டு _____

**(அ) 1767** (ஆ) 1768 (இ) 1764 (ஈ) 1763

40) ஜெர்மனியில் தொழிற்புரட்சி உருவாவதற்கு எது பெரிதும் உதவிகரமாய் அமைந்தது?

(அ) சுரங்கங்கள் (ஆ) தொழிற்சாலைகள் (இ) எஃகு **(ஈ) இருப்புப்பாதைகள்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக** 10 x 1 = 10

41) ______ இங்கிலாந்தில் ஆடவர்க்கு வாக்குரிமை கோரியது.

**சாசன இயக்கம்**

42) _______ உலகம் முழுவதும் சாலைகள் அமைக்கபடும் முறையை மாற்றியமைத்தது.

**ஜான் லவுடன் மெக்ஆடாமல் வடிவமைக்கப்பட்ட சாலை அமைக்கும் முறை**

43) விரைவாகவும் குறைந்த செலவிலும் எஃகை உற்பத்தி செய்யும் முறையை _______ கண்டுபிடித்தார்.

**ஹென்றி பெஸ்ஸிமர்**

44) விஞ்ஞான சோசலிஸத்தை முன்வைத்தவர் _____ ஆவார்.

**கார்ல் மார்க்ஸ்**

45) ஜெர்மனியில் முதல் இருப்புப்பாதை _____ ஆண்டில் இயக்கபட்டது.

**1835 ஆம்**

46) நீராவிப் படகினைக் கண்டுபிடித்தவர்_____

**கிளர்மோண்ட்**

47) வடகடலில் இருந்த பாதுகாப்பான இரண்டு துறைமுகங்கள் ____ மற்றும்______ .

**பிரெமன், ஹாம்பர்க்**

48) பிரஷ்யாவில் ஒருங்கிணைந்த இருப்புப்பாதை மையமாக உருவான நகரம்______

**பெர்லின்**

49) இருப்புப்பாதைகள் கி.மு. _______ நூற்றாண்டில் கிரேக்கத்தில் கோரினத்தில் அமைக்கப்பட்டன.

**ஆறாவது**

50) தொழிற்புரட்சியால் உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்க்கை ________ மாறியது.

**துயரம் மிக்கதாக**